**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 161 of 2023 |
| Prosecution Witness | : | PW 6 |

23.07.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : செந்தில் குமார் | Calling | : | காவல் ஆய்வாளர் |
| Father Name | : செல்வம் | Religion | : | |
| Village | : நடுக்காவேரி | Age | : | 56 |
| Taluk | : திருவையாறு | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் நடுக்காவேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.11.2022 தேதி துறையூர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது உதவி ஆய்வாளர் திரு.சந்திரகாந்த் பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட நிலைய குற்ற எண்.318/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 @ 279, 304(A) இ.த.ச வின் படியான வழக்கின் கோப்பினை எனது மேல்விசாரணைக்கு எடுத்து கொண்டேன். பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கில் காயம் பட்ட நபரான கதிரேசன் என்பவருக்கு முதல் சிகிச்சை மேற்கொண்ட துறையூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. வினோதா அவர்களை விசாரித்தும் வாக்கு மூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் திருச்சி அரசு மருத்துவமனை சென்று மருத்துவர் கலைச்செல்வியை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன கதிரேசன் இறப்பை தெரிவித்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். இறந்து போன நபரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் கார்த்திகேயன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:47:22 +0530

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில் குமார் அவர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். வாகனம் TN 93 B 3639 Bajaji CT 100, TN 46 T 4773 Bolero XLX ஆகிய இரண்டு வாகனங்களுக்கும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.10 மற்றும் 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சி 2 ம் நிலை காவலர் 2005 சதிஸ் என்பவரையும் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் சந்திரகாந்த் என்வரையும் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இ.த.ச சட்டப்பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் மருத்துவமனையில் கொண்டு வந்தவர் என்ற இடத்தில் குறிப்பிட்டுள்ள நவீன் என்பவரை இவ்வழக்கின் சாட்சியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்து வாக்கு மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் விசாரித்தேன் அவர்கள் உதவி ஆய்வாளரிடம் சொன்ன விவரங்களை என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்கு மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பொதுவாக தீபாவளிக்கு முதல் நாள் துறையூர் பெருமாள் அடிவாரத்தில் இருந்து துறையூர் பேருந்து நிலையம் வரை மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்று சொன்னால் சரிதான். அந்த கும்பளில் அனைத்து வாகனங்களும் மெதுவாக தான் செல்லும் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு கோப்புகளை பெற்றதற்கு பின்பு சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். துறையூர் to பெருமாள் மலை அடிவாரம் ரோடு மிகவும் அகலமான ரோடு என்று சொன்னால் சரிதான். அந்த ரோட்டில் துறையூரில் இருந்து பெரம்பலூர் செல்லும் போது வடது புறமாக தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். அதே போல் நாகலாபுரத்தில் இருந்து துறையூர் வரும் போது தெற்கு புறமாக தான் வர வேண்டும் என்று சொன்னால் சரிதான். அந்த ரோட்டில் இருச்சக்கர வாகனங்கள் செல்வதற்கு தனியாக சாலை உள்ளதா என்றால் இல்லை. நடைபாதை தான் உள்ளது. இவ்வழக்கின் விபத்து காயம்பட்டவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகள் வினோதா, கலைச்செல்வி, சிவக்குமார், கார்த்திகேயன் ஆகியோர்களை ஒரே

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:47:34 +0530

தேதியில் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். எனது குற்ற இறுதி அறிக்கையில் அவர்களை விசாரித்த நேரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை வெவ்வேறு தேதியில் தான் ஆய்விற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கின் மோட்டார் வாகன ஆய்வாளரை மருத்துவர்களை விசாரித்த அதே தேதியில் தான் விசாரித்துள்ளேன் என்று சொன்னால் இல்லை. அவரை 20.03.2023 அன்று விசாரித்தேன். இவ்வழக்கில் காரில் பயணம் செய்த நபர்களை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் விபத்து காயம்பட்ட நபரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் நடைபெற்றது என்றும் எதிரியின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் நடைபெறவில்லை என்றும் விபத்து நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படடுள்ளது என்றும் அதனை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

( இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி செந்தில்குமார் காவல் ஆய்வாளர் காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்த சொல்லி துறையூர் காவல் நிலைய காவலர் 1458 கொடுத்த வேண்டுதல் கடிதம் அடிப்படையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி செந்தில் குமார் காவல் ஆய்வாளர் இன்று 23.07.2026 அன்று தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள காணொலி காட்சி அரையில் இருந்து சாட்சியம் அளித்ததார். அவருடன் Co–Ordinator சி.மணிகண்டன் Programmer உடன் இருந்தார்.)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.23 09:47:45 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.